# தமிழ்நாடு அரசு தமிழ்க்கொத்து

**(தமிழ் விசைப்பலகைகள் – எழுத்துருக்கள்)**

## அறிமுக உரை

16-பிட்டு தமிழ் யூனிக்கோடு எழுத்துரு (Unicode) மற்றும் தமிழ் அனைத்து எழுத்துருக்கான (TACE16) தர நிர்ணயம் செய்து தமிழக அரசு அரசாணை ஒன்றினை 23.6.2010 அன்று வெளியிட்டது (தமிழக அரசாணை எண்: *G.O. (Ms) No.29]* 23.06.2010*)*.

அந்த அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, எழுத்துரு (Fonts), எழுத்துரு மாற்றி (Fonts Converter), விசைப்பலகை இடைமுக இயக்கி (Keyboard interface) ஆகியவற்றை உருவாக்குவதற்காக ஒரு தொழில்நுட்ப வல்லுநர்க் குழுவினை அமைத்தது.

இக்குழு, விரிவாக விவாதித்து யூனிக்கோடு குறியேற்றம் (Unicode Encoding) மற்றும் தமிழ் அனைத்து எழுத்துரு குறியேற்றம் (TACE16 Encoding) ஆகியவற்றுக்கான கீழ்கண்டுள்ள தமிழ் எழுத்துரு (Tamil fonts) மற்றும் தமிழ் விசைப்பலகை இடைமுக இயக்கி (Tamil Keyboard Interface) போன்ற மென்பொருள்கள் விண்டோஸ் (Windows), மேக்கின்தோஸ் (Macintosh), லினக்ஸ் (Linux) ஆகிய இயங்குதளங்களில் பயன்படுமாறு உருவாக்கி, சோதித்து, உலகளாவிய மென்பொருள் வல்லுநர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் கருத்துக்காக இணையதளத்தில் வெளியிட பரிந்துரைத்தது.

**(i) Tamil Fonts:**

| | **Unicode** | **TACE16** |
|---|---|---|
| Even Thickness | TAU-Barathi | TAC-Barathi |
| Thick & Thin | TAU-Valluvar | TAC-Valluvar |
| Script | TAU-Kambar | TAC-Kambar |
| Fixed | TAU-Kannagi | TAC-Kannagi |
| Headline | TAU-Kabilar | TAC-Kabilar |

*with Regular, Italic, Bold and BoldItalic for the respective Type styles.*

**(ii) Tamil Keyboard Interface:**

The Tamil99 and Typewriter keyboard drivers for

- Windows XP & later,
- Mac OS X,
- Linux
- On-screen keyboard for IE, Firefox, Safari, Opera and Chrome browsers

will be uploaded soon.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு தமிழ்க்கொத்து (தமிழ் விசைப்பலகைகள் – எழுத்துருக்கள்) மென்பொருள்கள் (பயனீட்டாளர் கருத்துரைக்காக) இவ்வலைத்தளத்தில் வெளியிடப்படுகிறது. கருத்துரைகள் பெறப்பட்டு தேவைப்பட்டால் இவற்றில் திருத்தங்கள் செய்து, மேம்பட்ட வடிவில் மென்பொருளின் அடுத்த பதிப்பு வெளியிடப்படும்.

எனவே பயனீட்டாளர்கள் தங்கள் கருத்துரைகளை இரண்டு வாரத்திற்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.